திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மொத்தம் 490 பேர்களில், 77 பேர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவர்களிலே அதிகமான பேர்கள், கிட்டத்தட்ட எல்லோருமே 'மீனியல் ஒர்க்கர்ஸ்' என்ற வகையில் தான் இருப்பது மாதிரி தெரிகிறது. பொறுப்பான பதவிகளிலே இருப்பதாகத் தெரியவில்லை. அறநிலையத் துறையில், அரிசனங்கள் 18 சதவிகிதம் என்பதிலிருந்து விதிவிலக்கு அல்லது அதனை அமுல் படுத்த முடியாத நிலையிருக்கிறதென்றால், அறநிலையம் என்பதோ, கோயில்கள் என்பதோ புனிதமானது என்று அரசு கருதுகிறதா ? அந்த இடங்களை நிரப்புவதற்கு அரசு ஏன் தயங்குகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இடங்களை நிரப்புவதற்கு அரசு தயங்குகிறது என்ற பொருளிலே பதில் அளிக்கப்படவில்லை. எதிர்காலத்திலே நியமிக்கப்படுகிற அத்தனை ஊழியர்களும் அரிசனங்கள் என்று உத்தரவாதம் தருவீர்களா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டது. அப்படிப்பட்ட உத்தரவாதத்தைச் சட்ட சம்மதம் இல்லாமல் தரமுடியாது என்றுதான் பதில் அளித்தேன். ஆகவே, அரிசனங்கள் தாழ்ந்த வேலைக்குத்தான் நியமிக்கப்பட வேண்டுமென்ற அந்த அடிப்படையில் எங்கேயும் வேலைகளில் நியமிக்கப்படவில்லை. பல ஆலயங்களில், நிர்வாகத் துறை அதிகாரிகள் அரிசனங்களாக இருக்கிறபொழுது, அங்கே கீழ் வேலைக்குத்தான் அரிசனங்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற கட்டாயத்தில் நியமிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு பரிசு வழங்குதல்.

*வினா எண் 423—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி, அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நேர்த்தியான கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு பரிசு கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

இல்லை.

திரு. போ. கோபாலன் : மாண்புமிகு தலைவரவர்களே, புத்தகங்கள் என்று சொல்லப்படுபவை, கையிலே எடுத்துப் பார்க்க அழகாக இருந்தால்தான் மனதிற்குப் படிக்கவும் கூட சாந்தி கிடைக்கும் என்ற கருத்து நிலவுகிறது. வெளிநாடுகளிலும், இந்தியாவிலே மற்ற இடங்களிலும் அழகான முறையிலே

1979 மார்ச் 16]

அச்சடிக்கப்பட்ட புத்தகங்களுக்கு வரவேற்பு கொடுக்கப்படுகிறது. பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. தமிழகத்திலே, அப்படிப்பட்ட புத்தகப் புரட்சி நடப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால், அத்தகைய இளைஞர்களை ஊக்குவிக்க, இனிமேலாகிலும் வெளிநாடுகளுக்கு ஈடாக, இரண்டு வகை புத்தகங்களையும் ஒரே இடத்திலே வைக்கக் கூடிய அளவு தகுதி படைத்த புத்தகங்களை அச்சிடுவோருக்கு பரிசு கொடுத்து அரசு ஊக்குவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அழகான தோற்றத்தைத் தருகின்ற புத்தகங்களை அச்சடித்துத் தருகின்ற, அந்த அழகுக்குப் பரிசு தருகின்ற திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டம் மத்திய அரசினாலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அரசிலே இப்பொழுது அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இருந்தாலும், அது அச்சுக் கலையை ஊக்குவிக்கிற முறையில் எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சியே தவிர, வெறும் அழகுக்காக புத்தகங்களை வாங்குகின்ற அந்த உணர்வுகளுக்கு ஊக்கம் தருகிற முறையில் அது எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சி இல்லை. என்றாலும், புத்தகங்களுடைய கருத்தை, அதிலே இருக்கிற விஷயங்களை மக்கள் உணர்ந்து வரவேற்கின்ற முயற்சியை, உணர்ச்சியைத்தான் நாம் வளர்க்க வேண்டுமே தவிர, வெறும் அழகுக்காக வரவேற்கின்ற முயற்சியை நாம் வளர்க்கக் கூடாது. அழகு என்ற பெயராலே எதை எதையோ, அழகு என்று எடுத்துக் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அழகு என்றாலே பெண்களைப் போடுவதுதான் அழகு என்ற அந்தக் கருத்துக் கூடப் பரவ ஆரம்பித்து விட்டது. எனவே, அழகு நல்ல கருத்துக்களிலே வளர நாம் முயற்சி எடுத்துக் கொள்வோம். அதற்குப் பிறகு கால அளவிலே வளர்ந்து வரும் அச்சுக் கலைக்கு பரிசு தர இந்த அரசு முயற்சிக்கும்.

[முற்பகல் 9-20]

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தச் செய்தி மற்றும் அற நிலையத் துறைக்குப் பொறுப்பேற்ற பின்னால், வெளியிடப்பட்டிருக்கிற பிரசுரங்கள் எல்லாம் கலையழகோடு இருப்பதைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு அவருக்கு கலையழகைப் பற்றி தெரிந்திருக்கிறது. அதனால் அவரே எது கலையழகு என்பதை முடிவு செய்து புத்தகங்களை அச்சடித்து பரிசு கொடுப்பாரா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே எது கலையழகு என்பதை நிர்ணயிப்பதிலேதான் சிக்கலே இருக்கிறது. அவரவர்களுடைய கருத்தை, மனத்தை, உணர்வுகளைப்

பொறுத்து அழகுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி முயற்சிகளை மேற் கொள்ளும்போது, உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும். தவிர, உறுப்பினர் அவர்கள் நான் பதவியேற்ற பிறகு கலையம்சத்தோடு பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன என்று பாராட்டினார்கள், அந்தப் பாராட்டுதலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கல்.

*வினா எண் 424— திரு. தீ. சு. நல்லதம்பி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சேவை பணிவிடை மூலமும், நகர்ப்புறங்களில் பணி செய்பவர்களுக்கு வங்கிகள் மூலமும் ஊதியம் நல்குமாறு ஆசிரியர் சங்கத்திடமிருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(ஆ) அவ்வாறே நேரடி ஊதியம் நல்க ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை (ஆ) இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடையாக சம்பளம் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் இப்பொழுது வழங்கப்படுகிறது. கிராமப் புறங்களிலே உள்ள பள்ளி ஆசிரியர்களுக்குத் தான் சம்பளம் சம்பந்தமாக ஊழல்கள் தனியார் துறைகளில் அதிகமாக இருக்கின்றன என்று அமைச்சருக்குத் தெரியும். பல மாதங்களாக சம்பளமே கொடுக்காமல் இருப்பது, பாதி சம்பளத்தைக் கொடுத்து விட்டு, முழு ஊதியத்தைப் பெற்றுக் கொண்டது போல ரசீது வாங்கிக் கொள்வது என்றெல்லாம் அங்கே நடைபெறுகின்றன. இவைகளுக்குக் குரல் கொடுக்கக்கூட முடியாத நிலையில் அந்த கிராமப்புற ஆசிரியர்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன. கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் கொடுக்கப்படும் திட்டம் இருக்கும் போது அதை கிராமப்புற பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்தத் திட்டத்தை பரப்பினால் நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன். இதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.